| | | | | | |
|---|---|---|---|---|---|
| வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | |
| மாவட்டம் : | **திண்டுக்கல்** | காலம் : | **24/04/2024** | முதல் | **28/04/2024** |
| அறிக்கை எண் : | **033/ 2024** | வெளியீட்டு நாள் : | | **23/04/2024** | |

## திண்டுக்கல் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 39°-41° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 27°-28° செல்சியஸ் ஆகவும் பதிவானது.

| கடந்தவார வானிலை (18.04.2024 **முதல்** 22.04.2024) | | | | | | **அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 28-04-2024- 08.30 வரை** | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 18/04 | 19/04 | 20/04 | 21/04 | 22/04 | **தேதி** | **நாள்-1** 24/04 | **நாள்-2** 25/04 | **நாள்-3** 26/04 | **நாள்-4** 27/04 | **நாள்-5** 28/04 |
| 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 0 |
| 40 | 40 | 39 | 41 | 40 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 41 | 42 | 42 | 41 | 41 |
| 27 | 28 | 28 | 27 | 27 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 27 | 26 | 25 | 26 | 25 |
| 4 | 5 | 4 | 4 | 3 | மேக மூட்டம் (ஆக்டா) | 3 | 1 | 2 | 3 | 4 |
| 72 | 88 | 65 | 74 | 62 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 70 | 70 | 70 | 70 | 70 |
| 41 | 41 | 46 | 44 | 43 | | 20 | 20 | 20 | 30 | 30 |
| 10 | 7 | 11 | 8 | 11 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 8 | 10 | 8 | 10 | 8 |
| தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | காற்றின் திசை | தென் **கிழக்கு** | தென் **கிழக்கு** | தென் **கிழக்கு** | தென் **கிழக்கு** | தென் **கிழக்கு** |

## குறுஞ்செய்தி :

அடுத்த 5 நாட்களுக்கு வறண்ட வானிலையே நிலவ வாய்ப்பு. அதிகபட்ச வெப்பநிலையானது 41°-42° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 25° - 27° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 8 முதல் 10 கி.மீ வேகத்தில், தென்கிழக்கு திசையிலிருந்து காற்று வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

அதிக அதிகபட்ச வெப்பநிலை மற்றும் மிதமான காற்று காரணமாக ஏற்படக் கூடிய ஈரப்பத இழப்பினை ஈடுசெய்ய பயிர்களுக்கு அதிக அளவில் நீர் பாசனத்தினை மேற்கொள்ளவும்.

**கால்நடை வளர்ப்பு :**

கால்நடை வளர்ப்போர் பகல் நேரங்களில் 30-60 நிமிட இடைவெளியில் 1 முதல் 5 நிமிடங்களுக்கு விலங்குகளின் உடலில் நேரடியாக தண்ணீரை தெளிப்பதன் மூலம் வெப்ப அழுத்தத்தில் இருந்து விலங்குகளை பாதுகாக்கலாம். மாட்டு கொட்டகையின் பக்கவாட்டில் (ஓரங்களில்) ஈரமான சணல் சாக்குபைகளை கட்டி விடவும். தாதுக்களுக்கான அதிகரித்த தேவையைப் பூர்த்தி செய்வதற்காக வெப்பமான காலநிலையின் போது விலங்குகளுக்கு அதிகரித்த தாது உப்புச் சேர்க்கையை உறுதி செய்யவும். கால்நடைகளுக்கு குறிப்பாக பொட்டாசியம் நிறைந்த தாதுக்கலவையினை வழங்குவதில் முன்னுரிமை அளிக்க வேண்டும்.

**விவசாயம் :**

மாவட்டத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த 5 நாட்களுக்கு (24.04.2024 முதல் 28.04.2024) அதிகமான வெப்பம் மற்றும் ஈரப்பத்ததுடன் கூடிய அசவுகரியமான வானிலை நிலவ வாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் வயல்வெளி வேலைகளை காலை மற்றும் மாலை நேரங்களில் செய்ய திட்டமிடவும். போதுமான அளவு தண்ணீர் குடிக்கும் படியும் மதிய (12 மணி முதல் 4 மணி வரை) நேரத்தில் வயலில் வேலை செய்வதைத் தவிர்த்து பாதுகாப்பாக இருக்கும்படியும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் : தக்காளி, பரங்கிக்காய், கால்நடை.**

**தக்காளி:**

நிலவும் வெப்பமான வானிலையின் காரணமாக தக்காளி பயிரில் காய்ப்புழுவின் தாக்குதல் தென்படுகிறது, இதனைக் கட்டுப்படுத்த

ஒரு எக்டருக்கு 12 என்ற எண்ணிக்கையில் இனக்கவர்ச்சிப் பொறி அமைக்க வேண்டும்.

தாக்கப்பட்ட பழங்களைப் பறித்து அழிக்கவேண்டும், வளர்ந்த புழுக்களையும் அழிக்கவேண்டும்.

ட்ரைகோகிம்மா முட்டை ஒட்டுண்ணியை எக்டருக்கு 50,000 என்ற அளவில் பூக்கும் தருணத்தில் பொருளாதாரச் சேதநிலை அறிந்துவிடவேண்டும்.

காய்ப்புழுவிற்கு என்.பி.வி வைரஸ் கலவை தெளிக்கவேண்டும்.

**பரங்கிக்காய்:**

பரங்கிக்காய் பயிரில் பரங்கிக்காய் பழ ஈக்களின் தாக்குதல் பரவலாக காணப்படுகிறது

பாதிக்கப்பட்ட பழங்களை சேகரித்து அழித்துவிடவும்.

வெயில் காலங்களில் ஈக்களின் எண்ணிக்கை குறைவாகவும், மழை காலங்களில் ஈக்களின் எண்ணிக்கை அதிகமாகவும் இருக்கும். எனவே அதன்படி விதைப்பு நேரத்தை சரிசெய்யலாம்.

பூச்சிக் கூடுகளை கண்டறிய நிலத்தை உழ வேண்டும்.

மீன் உணவு பொறியை பயன்படுத்தவும். (5 கி ஈரமான மீன் உணவு + பருத்தியில் நனைக்கப்பட்ட 1 மிலி டைக்லோர்வாஸ்), மொத்தமாக எக்டருக்கு 50 பொறிகள் தேவைப்படும்.

மீன் உணவு + பருத்தியில் நனைக்கப்பட்ட டைக்லோர்வாஸ் 20 மற்றும் 7 நாட்களுக்கு ஒரு முறை மாற்ற வேண்டும்.

தேவையிருப்பின் வேப்ப எண்ணெய் 3.0 சதவீதம் இலைத் தெளிப்பாக தெளிக்க வேண்டும்.

**கால்நடை:**

வெயில் காலங்களில், வறண்ட குளம் மற்றும் குட்டைகளில் தேங்கியுள்ள அசுத்தமான தண்ணீரில் உள்ள நத்தைகள், கிருமிகள் மற்றும் புழுக்கள் மூலம் கால்நடைகளை நோய் தாக்கக் கூடும். எனவே விவசாயிகள் தங்கள் கால்நடைகள் தண்ணீர் வற்றியுள்ள குளம் குட்டைளில் தண்ணீர் குடிக்க வைப்பதை தவிர்க்கும் படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.